நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 246/2024**

**P.W. 3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோகுலகண்ணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | தேவூர் |
| வட்டம் | : | சங்ககிரி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 3 |
| வயது | : | – |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.02PM. )

1) நான் தற்போது மேட்டூர் சமூக வனத்தில் ஓட்டுநர் உரிமத்துடன் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த சம்பவம் நடைபெற்ற சமயத்தில் மேட்டூர் வனச்சரகதத்தில் வனக்காப்பளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 22.01.2024 ம் தேதி சுமார் 8.00 மணிக்கு கருங்கல்லூர் கிராமம் மூலக்கொட்டாய்

பகுதியில் மகேந்திரன் என்பவர் கருங்காலி கட்டைகளை வெட்டி கடத்துவதாக கிடைத்த தகவலின் பேரில் வனச்சரக அலுவலர் தலைமையில் வனப்பணியாளர்கள் சுரேஷ்குமார் வனச்சரக அலுவலர், நல்லதம்பி வனக்காப்பாளர், சதிஷ்குமார் வனக்காப்பாளர், பத்ரன் வனக்காப்பாளர் மற்றும் நான் சம்பவயிடத்திற்கு சென்று சோதனை செய்த போது ஈஸ்வரி வீட்டிற்கு முன்பகுதியில் கருங்காலி கட்டைகள் மற்றும் கருங்காலி தூள்களை பாலீத்தின் பைகளில் நிரப்பியும், அதனை பாலீத்தின் கொண்டு மூடிவைத்திருந்தனர்.

2) பின்பு அருகில் இருந்த ஈஸ்வரி அவர்களை விசாரிக்கும்போது இந்த கருங்காலி கட்டைகள் தனது தம்பி மகேந்திரனுக்கு சொந்தமானது என்று கூறினார். விசாரிக்கும் போது அவருடைய மருமகள் கண்ணம்மாள் அருகில் இருந்தார். வனச்சரக அலுவலர் மகேந்திரன் அவர்களை விசாரிக்கும் பொருட்டு தொலைப்பேசி வாயிலாக அழைத்தார். அவர் வரவில்லை. பின்பு இது குறித்து கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுத்துவிட்டு, நின்றுக்கொண்டிருந்தோம்.

3) அந்த சமயம் கருங்கல்லூர் முன்னால் பஞ்சாயத்து தலைவர் சின்னப்பன் என்பவர் தனது வெள்ளை நிற பொலிரோ ஜீப்பில் அவருடன் வண்டியை ஓட்டிக்கொண்டு வினோத்குமார் என்பவரும் வந்தனர். இருவரும் மது போதையில் இருந்தனர். சின்னப்பன் வனச்சரக அலுவலரிடம் இதனை பற்றி கேட்கும்பொழுது வனச்சரக அலுவலர் கருங்காலி கட்டைகள் இருத்ததை பற்றி கூறினார்.

4) உடனே சின்னப்பன் இது ஒன்றும் பெரிய குற்றம் கிடையாது, கிளம்புங்கள் என்று கூறினார். உடனே வனச்சரக அலுவலர் மகேந்திரனிடம் விசாரிக்க வேண்டியிருப்பதால் அவர் வரும்வரை மற்றும் கருங்காலி கட்டைகளை எடுத்து செல்லும் பொருட்டும் இங்க இருப்பதாக கூறினார். உடனே சின்னப்பன் நீங்கள் ஒரு மயிரும் புடுங்க முடியாது, உங்களால் முடிந்ததை பாருங்கள் என்று மிரட்டி அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார். இவ்வாறு சின்னப்பன் செய்துக்கொண்டிருக்கும் பொழுது

5) உடன் வந்த வினோத்குமார் தேவிடியா பசங்களா உங்களை சும்மா விடமாட்டேன் என்று அரசு பணிகளை செய்யவிடால் மிரட்டல் விடுத்தார். இதனை அடுத்து வனச்சரக அலுவலர் உயர் அதிகாரிக்கு தகவல் கொடுத்தார். உயர் அதிகாரி காவல்துறைக்கு தகவல் கொடுத்து காவல் துறை வருவதாக வனச்சரக அலுவலருக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்தார். காவல் துறையினர் வருவதாக சொன்னவுடன் சின்னப்பன் போலீஸ் வந்தாலும், ஒரு மயிறும் புடுங்க முடியாது என்று கூறிக்கொண்டு தனது வாகனத்தில் ஏறி சென்றுவிட்டார்.

6) பின்பு வந்த காவல்துறையினர் இதனை பற்றி விசாரித்து கருங்காலி கட்டைகளை எடுத்து செல்ல பாதுகாப்பு வழங்கினர். அங்கிருந்த கருங்காலி கட்டைகளை வனச்சரக அலுவலகம் எடுத்து வந்தோம். வனத்துறையினரை அரசு பணி செய்யவிடாமல் தடுத்த சின்னப்பன் மீது வனச்சரக அலுவலர் கொளத்தூர் காவல்நிலையத்தில் வழக்கு கொடுத்தார். இதனை பற்றி கொளத்தூர் காவல்நிலையத்தில் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.26 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கண்ணம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | முத்துராஜ் |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 4** |
| வயது | : | 33 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**2–ம் எதிரி ஆஜர் 1–ம் எதிரி ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.27 p.m. )

1) நான் தற்போது கணவாய் காட்டில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவதன்று நான் கூலி வேலைக்கு சென்றுவிட்டேன். அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

1. மகேந்திரன் என்னுடைய உறவினர் என்றால் சரிதான். அவர் கருங்காலி கட்டைகளையும், தூள்களையும் விலைக்கு வாங்கி விற்பனை செய்து வந்தார் என்றால் சரிதான். என்னுடைய மாமியார் பெயர் ஈஸ்வரி. கருங்காலி லோடுக்கள் எல்லாம் ஈஸ்வரி வீட்டில் தான் வைத்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. 22.01.2024—ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் என் மாமியார் வீட்டில் இருந்த போது அங்கு வந்த வனத்துறையினர் மகேந்திரன் என்பவர் திருட்டு தனமாக கருங்காலி கட்டைகளை பதுக்கி வைத்திருப்பதாகவும், சோதனை செய்ய வேண்டும் என்று எங்களிடம் சொன்னார்கள் என்றால் சொல்லவில்லை.

3. அதன் படி வனத்துறையினர் சோதனை செய்து என்னுடைய மாமியார் இடத்தில் இருந்த கருங்காலி கட்டைகளையும், தூள்களையும் வனத்துறையினர் கண்டு பிடித்து இது யாருடையது என்று கேட்ட போது என்னுடைய மாமியார் மகேந்திரன் என்பவருடையது என்று சொன்னோம் என்றால் சொல்லவில்லை.

4. மகேந்திரனுக்கு போன் செய்து வரச்சொல்லி வராததால் இந்த வழக்கின் எதிரிகள் இருவரும் வெள்ளை நிற பொலிரோ ஜீப்பில் வந்து தகராறு செய்ததாகவும், அதில் சின்னப்பன் என்பவர் வனத்துறையினரை கெட்ட வார்த்தையால் திட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், ஜீப்பை ஓட்டி வந்த வினோத்குமார் என்பவர் உயிரோடு போகமுடியாது என்று வனத்துறையினரை மிரட்டியதாகவும், போலீஸ் வந்தாலும் ஒரு மயிரும் பிடுங்க முடியாது என்று மிரட்டியதை அங்கு வந்த போலீசார் கருங்காலி

கட்டைகளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் என்னை போலீசார் விசாரிக்கவேயில்லை.

5. எதிரிகள் இருவரும் என்னுடைய உறவினர் என்பதால் அவர்களுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.37 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W. 5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரி |
| தந்தை / கணவர் பெயர் | : | குழந்தை |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**2–ம் எதிரி ஆஜர் 1–ம் எதிரி ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.38 p.m. )

1) நான் தற்போது கணவாய் காட்டில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். மகேந்திரன் என்பவர் என்னுடைய தம்பி. எதிரிகளை தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவதன்று நான் கூலி வேலைக்கு சென்றுவிட்டேன். அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–

1. மகேந்திரன் என்னுடைய தம்பி என்றால் சரிதான். அவர் கருங்காலி கட்டைகளையும், தூள்களையும் விலைக்கு வாங்கி விற்பனை செய்து வந்தார் என்றால் சரிதான். கருங்காலி லோடுக்கள் எல்லாம் என்னுடைய வீட்டில் தான் வைத்து இருந்தார் என்றால் இல்லை.

2. 22.01.2024–ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் இருந்த போது அங்கு வந்த வனத்துறையினர் என்னுடைய தம்பி மகேந்திரன் என்பவர் திருட்டு தனமாக கருங்காலி கட்டைகளை பதுக்கி வைத்திருப்பதாகவும், சோதனை செய்ய வேண்டும் என்று எங்களிடம் சொன்னார்கள் என்றால் சொல்லவில்லை.

3. அதன் படி வனத்துறையினர் சோதனை செய்து என்னுடைய இடத்தில் இருந்த கருங்காலி கட்டைகளையும், தூள்களையும் வனத்துறையினர் கண்டு பிடித்து இது யாருடையது என்று கேட்ட போது நான் மகேந்திரன் என்பவருடையது என்று சொன்னோம் என்றால் சொல்லவில்லை.

4. மகேந்திரனுக்கு போன் செய்து வரச்சொல்லி வராததால் இந்த வழக்கின் எதிரிகள் இருவரும் வெள்ளை நிற பொலிரோ ஜீப்பில் வந்து தகராறு செய்ததாகவும், அதில் சின்னப்பன் என்பவர் வனத்துறையினரை கெட்ட வார்த்தையால் திட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், ஜீப்பை ஓட்டி வந்த வினோத்குமார் என்பவர் உயிரோடு போகமுடியாது என்று வனத்துறையினரை மிரட்டியதாகவும், போலீஸ் வந்தாலும் ஒரு மயிரும் பிடுங்க முடியாது என்று மிரட்டியதை அங்கு வந்த போலீசார் கருங்காலி கட்டைகளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்று

போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் என்னை போலீசார் விசாரிக்கவேயில்லை.

5. எதிரிகள் இருவரும் என்னுடைய உறவினர் என்பதாலும், மகேந்திரன் என்னுடைய தம்பி என்பதாலும் அவர்களுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.42 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 246/2024**

**P.W. 6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜம்மாள் |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னகுழந்தை |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 6 |
| வயது | : | 61 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 13–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**2–ம் எதிரி ஆஜர் 1–ம் எதிரி ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.44 p.m. )

1) நான் தற்போது கொளத்தூர் மூலக்கொட்டாயில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவதன்று நான் கூலி வேலைக்கு சென்றுவிட்டேன். அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. மகேந்திரன் என்பவர் என்னுடைய வீட்டிற்கு சற்று தள்ளி குடியிருக்கிறார். அவர் கருங்காலி கட்டைகளையும், தூள்களையும் விலைக்கு வாங்கி விற்பனை செய்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஈஸ்வரி என்பவர் என்னுடைய உறவினர். கருங்காலி லோடுக்கள் எல்லாம் ஈஸ்வரி வீட்டில் தான் மகேந்திரன் மறைத்து வைத்து இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. 22.01.2024–ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது அங்கு வந்த வனத்துறையினர் மகேந்திரன் என்பவர் திருட்டு தனமாக கருங்காலி கட்டைகளை பதுக்கி வைத்திருப்பதாகவும், சோதனை செய்ய வேண்டும் என்று அ.சா.5–யிடம் சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. அதன் படி வனத்துறையினர் சோதனை செய்து அ.சா.5–ன் இடத்தில் இருந்த கருங்காலி கட்டைகளையும், தூள்களையும் வனத்துறையினர் கண்டு பிடித்து இது யாருடையது என்று ஈஸ்வரியிடம் கேட்டபோது மகேந்திரன் என்பவருடையது என்று சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. மகேந்திரனுக்கு போன் செய்து வரச்சொல்லி வராததால் இந்த வழக்கின் எதிரிகள் இருவரும் வெள்ளை நிற பொலிரோ ஜீப்பில் வந்து தகராறு செய்ததாகவும், அதில் சின்னப்பன் என்பவர் வனத்துறையினரை கெட்ட வார்த்தையால் திட்டி கொலைமிரட்டல் விடுத்ததாகவும், ஜீப்பை ஓட்டி வந்த வினோத்குமார் என்பவர் உயிரோடு போகமுடியாது என்று

வனத்துறையினரை மிரட்டியதாகவும், போலீஸ் வந்தாலும் ஒரு மயிரும் பிடுங்க முடியாது என்று மிரட்டியதை அங்கு வந்த போலீசார் கருங்காலி கட்டைகளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. எதிரிகள் இருவரும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.46 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W. 7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஜய் |
| தந்தை / கணவர் பெயர் | : | மணி |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 27 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**2–ம் எதிரி ஆஜர் 1–ம் எதிரி ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.48 p.m. )

1) நான் தற்போது கணவாய் காட்டில் குடியிருக்கிறேன். கல்லூரி முடித்துவிட்டு வேலை தேடி வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம்

காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

1. இந்த வழக்கின் எதிரிகள் வனத்துறையினர் சம்பவயிடம் சென்று சோதனை செய்தபோது அவர்களை பணி செய்யவிடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்தாக கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு சம்மந்தமாக 23.01.2024—ம் தேதி மதியம் 2.30 மணியளவில் போலீசார் சம்பவயிடம் வந்தபோது அங்கிருந்த முருகேசன் மற்றும் என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி படித்து காண்பித்த பிறகு தான் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல.

2. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றோம் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**
**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:— 01.51 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W. 8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆண்டியப்பன் |
| கிராமம் | : | கருங்கல்லூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 8** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**2–ம் எதிரி ஆஜர் 1–ம் எதிரி ஆஜரில் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.52 p.m. )

1) நான் தற்போது நாயம்பாடியில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள**

**இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கின் எதிரிகள் வனத்துறையினர் சம்பவயிடம் சென்று சோதனை செய்தபோது அவர்களை பணி செய்யவிடாமல் தடுத்து கொலை மிரட்டல் விடுத்தாக கேள்விப்பட்டேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு சம்மந்தமாக 23.01.2024–ம் தேதி மதியம் 2.30 மணியளவில் போலீசார் சம்பவயிடம் வந்தபோது அங்கிருந்த விஜய் மற்றும் என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி படித்து காண்பித்த பிறகு தான் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல.

2. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றோம் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**
விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.51 p.m.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**